Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 224/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW 2** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | விஷ்ணுவர்தன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | சார்பு ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026.

<u>( 1ம் எதிரி ஆஜரில்லை, 1ம் எதிரி தரப்பில் BNSS–355ன் கீழ்மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மதுரை மாநகர Cyber Crime காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023ம் ஆண்டு ஆர்எஸ் மங்களம் காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது 07.10.2023ம் தேதி ஆர்எஸ் மங்களம் காவல் நிலைய ஆய்வாளர் பாஸ்கரன் தலைமையில் நானும், தலைமை காவலர் 227 செல்லதுரை மற்றும் மு.நி.கா.1806 சுரேஷ் ஆகியோர் ஆர்எஸ் மங்களம் புள்ளமடை ரோட்டில் உள்ள தூயஆவிஆண்டவர் சர்ச் முன்பாக காலை 05.00 மணிக்கு இரவு

ரோந்து அலுவலாக வாகனதணிக்கை செய்து வந்தோம். அப்போது அந்த வழியாக TN 65 AS 5281 என்ற எண்கொண்ட TATA ACE HT PLUS என்ற வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது வாகனத்தின் உள்ளே தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் பாக்குவகைகளான கணேஷ் புகையிலை 225 கிராம் எடைகொண்ட 530 பண்டல்கள் 119.250 கிலோகிராம், கணேஷ்புகையிலை 240 கிராம் எடை கொண்ட 313 பண்டல்கள் 75.120 கிலோகிராம் உடையது, Hons 300 கிராம் எடைகொண்ட 34 பண்டல்கள் 10.200 கிலோகிராம் உடையது, Coollip 113.4 கிராம் எடைகொண்ட 180 பண்டல்கள் 20.412 கிலோகிராம் உடையது, ராஜ்நிவாஷ் பாக்குவகை 100 கிராம் எடைகொண்ட 174 பண்டல்கள் 17.4 கிலோகிராம் உடையது, ZL01 பாக்கு 174 பண்டல்கள் 4.8 கிலோகிராம் உடையது, V1 பாக்கு 141 பண்டல்கள் 3.5 கிலோகிராம், விமல் பாக்கு 84 கிராம் எடைகொண்ட 137 பண்டல்கள் 11.508 கிலோகிராம் உடையது ஆகிய பொருட்கள் இருந்தது. அவர்களை விசாரித்தபோது வாகனத்தை ஓட்டி வந்தநபர் சித்திரவேலு வயது 23 த/பெ.மாரிகிருஷ்ணன், கோழியார்கோட்டை, ஆர்எஸ் மங்களம் என்பது தெரியவந்தது. அவர் உடன் வந்த நபர் ராஜகுமாரன், வயது 44, த/பெ.சுப்பையா என்பது தெரியவந்தது. அவர்களிடம் விசாரித்தபோது அவர்களை இரண்டு நாட்களுக்கு முன்பு ஆர்எஸ் மங்களம் புள்ளமடை மேற்குபகுதியை சேர்ந்த சுப்பையா மகன் மற்றும் ராஜகுமாரனின் தம்பியாகிய பாலமுருகன் 07.10.2023ம் தேதி அதிகாலை சவேரியார்பட்டினம் விலக்கு அருகே உள்ள சத்துமாவு கிடோனில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை மற்றும் பாக்கு பொருட்களை இறக்கி வைத்திருக்கும்படியும், யாருக்கும் தெரியாமல் தடைசெய்யப்பட்டபுகையிலை பொருட்களை மறைத்து வைத்திருக்கும்படியும் சொல்லியிருந்ததாகவும், இதற்கு அதிகஅளவில் பணம் தருவதாக சொல்லி பணத்தின் ஆசையில் தமிழக அரசால்தடைசெய்யப்பட்ட பொருட்கள் என்று தெரிந்தும் இந்த புகையிலை மற்றும் பாக்கு பொருட்களை விற்றால் அதை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு புற்றுநோய் மற்றும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் என்று தெரிந்திருந்தும் இந்த பொருட்களை ஏற்றி வந்ததாக கூறினார்கள். இதனால் இவர்கள் இருவரையும் அதிகாலை 05.15 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்து அதில் 1ம் எதிரி சித்திரவேலு என்பவர் தானாக முன்வந்து எந்தவொரு அச்சுறுத்தலோ அல்லது துன்புறுத்தலோ அல்லது ஆசைவார்த்தைகளோ இல்லாமல் தானாக முன்வந்து

ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதேஇடத்தில் தனிநபர்கள் யாரும் முன்வராத காரணத்தினால் அதே சாட்சிகளான தலைமை காவலர் 227 செல்லதுரை மற்றும் 1806 முநிகா சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 05.30 மணியிலிருந்து 07.00 மணிவரை ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து அதே சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் வாகனத்தை அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டது. பின்னர் கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் ஏற்றிவந்த வாகனம் மற்றும் எதிரிகளுடன் காலை 08.30 மணிக்கு ஆர்எஸ் மங்களம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வழக்கின் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.209/2023 சட்டபிரிவுகள் 24(1), COTPA ACT and 328 இதசவின் கீழ் காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார், ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். ஆஜர் எதிரிகளிடமிருந்துதான் ஆய்வாளர் மற்றும் நாங்கள் புகையிலை பொருட்களை கைப்பற்றினோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

ஒவ்வொரு நாள் பணி செய்வதுசம்மந்தமாக பாக்கெட் டைரி பராமரித்து வருவோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது சம்மந்தமாக வாகனசோதனை செய்ததை எனது பாக்கெட்டைரியில் குறித்திருப்பேன் என்றால்சரிதான். அதை நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். அந்த பாக்கெட்டைரி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் வாகன சோதனை செய்ததாக சொலலப்படும் நாளன்று வாகன சோதனைக்காக பணி செய்யவில்லை என்பதால் தான் பாக்கெட்டைரி நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறிய த.கா. முநிகா, நான் ஆகிய மூவர் தவிர்த்து மற்ற நபர்கள் யாரும் வாகன சோதனைக்கு வரவில்லை என்றால் சரியல்ல, ஆய்வாளரும் வந்தார். பொதுவாக வாகன சோதனை மாலையில்தான் செய்வோம் என்றால் சரியல்ல, காலையிலும் செய்வோம். அன்றைய தினம் நாங்கள் வாகன தணிக்கை செய்வதற்கு காவல் நிலையத்திலிருந்து தூய ஆவிஆண்டவர் ஆலயத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் வாகன சோதனை செய்த சாலை எந்ததிசையிலிருந்து எந்த திசைநோக்கி செல்கிறது என்றால் ஞாபகமில்லை. அதேபோல் நாங்கள் ரோட்டின்

எந்த திசையில் நின்று கொண்டிருந்து வாகன தணிக்கை செய்தோம் என்றால் தூயஆவிஆண்டவர் ஆலயத்திற்கு முன்பு செய்தோம். தூய ஆவி ஆண்டவர் ஆலயம் ரோட்டிற்கு எந்த திசையில் உள்ளது என்றால் ஞாபகமில்லை. நாங்கள் எதிரிகள் வந்த வாகனத்தை தணிக்கை செய்வதற்கு முன்பாக வேறு வாகனங்களை தணிக்கை செய்தோமா என்றால் ஞாபகமில்லை. நாங்கள் வாகன தணிக்கு செய்தது 3 மணிநேரம் இருக்குமா என்றால் 02.30 மணிநேரம் இருக்கும். நாங்கள் வாகன தணிக்கை செய்த ரோட்டில் கிழக்குபக்கம் வரிசையாக வீடுகள் உள்ளது என்று சொன்னால் இடையில் காலியிடங்களும் உள்ளது. வாகன தணிக்கை செய்தபோது மக்கள் நடமாட்டம் இருந்தது என்றால் ஞாபகமில்லை. அத்தாட்சி, ஒப்புதல் வாக்குமூலத்தை நான்தான் எழுதினேன் என்றால் ஞாபகமில்லை. எதிரிகள் ஓட்டி வந்த வாகனத்தை முதன்முதலில் யார் நிறுத்தியது என்றால் நான்தான். கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை காவல்நிலையத்திற்கு கொண்டுவந்துதான் எடைபோட்டோம் என்றால் கைப்பற்றிய புகையிலை பாக்கெட்டுகளிலேயே அதன் எடை விவரம் இருந்தது, அதை வைத்து மொத்த எடையை எழுதிக்கொண்டோம். நாங்கள் தனிப்பட்டமுறையில் பாக்கெட்டுகளில் சொல்லப்பட்டுள்ள எடை, அளவுகளின்படி எடை உள்ளதா, எண்ணிக்கை உள்ளதா என சரிபார்க்கவில்லை என்றால் ஞாபகமில்லை. என்னை ஆய்வாளர் எங்கு வைத்து, எப்போது விசாரித்தார் என்றால், அன்றைய தினமே காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார். மற்ற காவலர்களையும் காவல்நிலையத்தில் வைத்துதான் ஆய்வாளர் விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை ஆய்வாளர் எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பினார் என்றால் ஞாபகமில்லை. வாகன தணிக்கை செய்த இடத்தில் வரைபடம், பார்வைமகசர் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல், சொன்ன இடத்தில் வாகன தணிக்கை செய்யவில்லை என்பதால்தான் வரைபடம், மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாகன தணிக்கை செய்த இடத்திற்கு பக்கத்தில் உள்ள ஆட்களை சாட்சியாக இருக்க கூப்பிட்டோமா என்றால் தனிநபர்கள் யாரையும் நாங்கள் கவனிக்கவில்லை. வாகன சோதனை முடித்து செல்லும்போது கூட வாகன தணிக்கை செய்தஇடத்தில் உள்ள தனிநபர்களை சாட்சியாக அழைக்கவில்லை என்றால் தாமாக யாரும் முன்வரவில்லை. நாங்கள் யாரை சாட்சியாக இருக்க கூப்பிட்டோம், வரமறுத்துவிட்டார்கள் என பாக்கெட்டைரியில் குறித்துக்கொண்டோமா

என்றால் இல்லை. நாங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்கள் வெளிமார்க்கெட்டில் கள்ளத்தனமாக விற்கக்கூடிய பொருட்கள் என்றால் சரிதான். நாங்கள் வேறுநபர்களிடமிருந்து, வேறுஇடத்தில் கைப்பற்றிய பொருட்களை வைத்து எதிரிகள் மேல் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் கைப்பற்றிய பொருட்களுக்கும், எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு காவல நிலையத்திலும் வருடத்திற்கு புகையிலை சம்மந்தமாக இத்தனை வழக்கு போடவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிகள் மீது வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், இடத்தில் வைத்து எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.